**வாக்குமூலம்**

**16–வது கூடுதல் அமர்வு நீதிமன்றம், மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை**

அமர்வு வழக்கு எண்: 82/2022

வழக்கு சாட்சி: அ.சா.6

| | |
|---|---|
| பெயர் : சசிதரன் | முகவரி/கிராமம் : கதவு எண்.12/20, ஜெயலட்சுமி புரம், நுங்கம்பாக்கம், சென்னை–34. |
| தகப்பனார் பெயர் : கிருஷ்ணன் | |
| வயது : 26 | |
| தொழில் : மெக்கானிக் வேலை | தாலுக்கா : |
| ஜாதி : | சமயம் : |

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provision of Act 1873 on the 29th January 2025:

ஆதார் அட்டையின் நகல் மற்றும் காவல்நிலைய காவலரின் உறுதிமொழி ஆகியவற்றின் அடிப்படையில் சாட்சியின் அடையாளம் உறுதி செய்யப்பட்டது. சாட்சியின் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது.

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்துக் கொண்டு மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் எனக்கு மஞ்சள் சட்டை போட்டவரை தெரியும். (மஞ்சள் சட்டை போட்ட நபர் 2–வது எதிரி அப்துல் ரஹீம் என்பவர்). சாட்சி கோவிந்தராஜ் என்பவரை எனக்கு தெரியும். 19.05.2021 ஆம் தேதியன்று காலை 8 முதல் 8.15 மணி இருக்கும். அப்போது நான் டிபிஐ பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தேன். அங்கு வைத்து எப்–3, நுங்கம்பாக்கம் போலீசார் 2–வது எதிரியை விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது 2–வது எதிரி ஒரு பட்டன் கத்தியை எடுத்துக் கொடுத்தார். அதற்கு சாட்சியாக இருப்பதற்கு கையெழுத்து போடும்படி போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் நானும், கோவிந்தராஜூம் கையெழுத்து போட்டோம். தற்போது என்னிடம் காட்டப்படும்

ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர்களிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையவைகள் தான். 2–வது எதிரி அப்துல் ரஹீம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.7**. பட்டன் கத்தி கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.8**. தற்போது என்னிடம் காண்பிக்கக்கூடிய சிறிய பட்டன் கத்தியைத்தான் போலீசாரிடம் 2–வது எதிரி கொடுத்தார். சிறிய பட்டன் கத்தி ஏற்கெனவே சா.பொ.2 ஆக குறியிடப்பட்டது. என்னை போலீசார் விசாரித்தனர்.

1 வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை – இல்லை.

2,3 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை –

நான் 10–ஆம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். சேத்துப்பட்டில் நான் இருசக்கர இயக்கவூர்தி வாகனங்களை பழுது நீக்கும் பணிசெய்து வருகிறேன். வழக்கமாக காலை 9 மணிக்கு வேலைக்கு செல்வேன். இதற்கு முன்பாக நான் எந்த நீதிமன்றத்திற்கும் சாட்சி சொல்ல சென்றதில்லை. இதுவே முதல்முறை. காலை 7.50 மணிக்கு டிபிஐ அருகில் டீ சாப்பிடுவதற்காக சென்றேன். நான் சென்ற போது 3 போலீசார் அங்கு இருந்தார்கள். பொதுமக்கள் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் – சுமார் 10 நபர்கள் இருந்தார்கள். நான் சென்ற பிறகுதான் போலீசார் விசாரிக்கத் தொடங்கினார்கள். அப்போது காலை 8 மணி இருக்கும். எதிரி சொன்ன விசயத்தை போலீசார் கையால் எழுதிக் கொண்டிருந்தார். அவ்வாறு கையால் எழுதிக் கொண்டிருந்த தாளில்தான் நாங்கள் கையொப்பம் செய்தோம். போலீசார் கேட்டார்கள் என்பதற்காகத்தான் நானும், கோவிந்தராஜூம் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். ஆஜர்படுத்திய கத்தி எதற்காக பயன்படுத்தப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. அந்த கத்தியை இடுப்பிலிருந்துதான் எதிரி எடுத்து கொடுத்தார். இடது பக்க இடுப்பு பகுதியிலிருந்துதான் அந்த கத்தியை எதிரி எடுத்து கொடுத்தார். அந்த கத்தி எந்த

கம்பெனியைச் சேர்ந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் மொத்தமாக 2 கையொப்பங்கள் தான் போட்டேன். நான் போலீசாரின் கையிருப்பு சாட்சி என்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் காவல்நிலையத்திற்கு சென்று அவர்கள் போடச் சொன்ன இடங்களிலெல்லாம் கையொப்பம் போட்டுவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் – அது சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.